**பக்கம்.**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.4/2016**

**வா.சா. –2 (கண்ணப்பன் )**

**நாள். 22.08.2025.**

**வா.சா.2 இன்று ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விவசாய வேலை செய்கிறேன். நான் ஆறுமுககவுண்டர் தோட்ட வீட்டு பக்கத்தில் நானும் ஒரு தோட்ட வீட்டில் வசிக்கிறேன். ஆறுமுக கவுண்டர் உயிருடன் இருக்கும் வரை ராஜன்னாவும் 1ம்பிரதிவாதி முத்துச்சாமியும் பார்த்துக் கொண்ட விவரம் எனக்குதெரியும் என்றால் சரிதான். வாதிகள் தாக்கல் செய்த தாவா சொத்துக்கள் எங்கேயிருக்கிறது என்றால் என்னுடைய தோட்டத்தை ஒட்டி வடபுறம் இருக்கிறது. ஆறுமுக கவுண்டர் எங்கே இறந்தார் என்றால் தோப்புபட்டியில் உள்ள தோட்டத்து வீட்டில் இறந்தார். அவரது இறப்பிற்கு நான் சென்றேன். ஆறுமுக கவுண்டைரை எனக்கு சுமார் 40 வருடங்களாக தெரியும். ஆறுமுக கவுண்டரின் மூத்த தாரத்து மகன் முத்துச்சாமியை எனக்கு 40 வருடங்களாக தெரியும். மூத்த தாரத்து மகன் முத்துச்சாமி ஆறுமுக கவுண்டரை அவ்வப்போது வந்து பார்த்து செல்வதை நான் பாத்திருக்கிறேன் என்றால் சரிதான். இளையதாரத்து மகன் ராஜன்னாவும் ஆறுமுக கவுண்டரை நன்றாக பராமரித்துக் கொண்டிருந்தார் என்பது எனக்கு நன்றாக தெரியும். நேரடியாகவே தெரியும். தாவா சொத்தை நான் குத்தகைக்கு எடுத்துள்ளேன் என்றால் சரிதான். 2011 ஆம் வருடம் குத்தகைக்கு எடுத்தேன். 1ம் வாதி ராஜன்னா இறந்த பின்பு அவரது மகன் சுரேஷ்தான் எனக்கு வருடாந்திர குத்தகைக்கு தாவா சொத்தை கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான்.

மறுவிசாரணை – இல்லை.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.08.22 19:34:22 +0530

Additional District and Sessions Judge,

**Dindigul.**